**கவனிக்க.**- 2018.08.10 ஆந் திகதிய இலங்கை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2085 - 2018 අගෝස්තු මස 17 වැනි සිකුරාදා - 2018.08.17

2085 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1112 | வரவு செலவுக் கூற்றுகள் | 1132 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1128 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | | |


**கவனிக்க.**- நிதி சட்ட மூலம் 2018, ஓகத்து மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளில் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஓகத்து மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1111 - B81441 - 5,403 (2018/08)

# பதவிகள் - வெற்றிடம்

## நாத்தாண்டிய பிரதேச சபை

நாத்தாண்டிய பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள வடமேல் மாகாண அரச சேவையில் கீழ்க் காணப்படும் பதவிகளுக்கு சேர்த்துக் கொள்வதற்காக நாத்தாண்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் நிரந்தரமாக வசிக்கின்றவர்களிடத்தில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளக் குறியீடு | சம்பளத் திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | பார வாகன நடத்துணர் | 01 | PL 3-2016 | ரூ.25,790-10X270-10X300-10X330-12X350-ரூ.38,990 (இச் சம்பளம் உரித்தாவது 2020.01.01 ஆந் திகதி தொடக்கமாவதுடன் 3/2016 சுற்று நிருபத்தின் உப அட்டவணை II இன் ஒழுங்குகளுக்கமைய நியமனம் செயல்படுத்தப்படும் திகதி தொடக்கம் சம்பளம் வழங்கப்படும்.) | வெளி விண்ணப்பதாரிகளுக்காக<br>(அ) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது இரு பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் 06 பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பு பாடம் தவிர்த்து) குறைந்த பட்சம் ஒரே அமர்வின் 05 பாடமாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>உள்ளக விண்ணப்பதாரிகளுக்காக<br>(ஆ) தற்போது மாகாண சபை அரச சேவையில் உரிய நிறுவனத்தில் நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல்.<br>இந்த நடைமுறைகள் செயற்படும் திகதி ஆகும் போது ஆரம்ப தொழில்நுட்ப பதவிக்காக அமய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்து கொண்டுள்ள பணியாளர் களுக்கு மாத்திரம் தனிப்பட்ட அடிப்படையில் அச் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ஆட்சேர்ப்பு நடை முறையில் காணப்பட்ட கல்வித் தகைமைகள் இதற்கு உரித்தாகும்.<br>தொழில்நுட்ப அறிவு /திறமை மற்றும் அனுபவம்<br>பொதியில்லாத எடை ஹொன்டர் 34 இற்கு மேற்பட்ட மோட்டார் முற்பகுதியும் பார ரேலர் மூலம் 32 பேருக்கு அதிகமான பயணிகளை கொண்டு செல்லக் கூடிய பஸ் வண்டியை செலுத்துவதற்கு மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப்பட்ட தகுதி பற்றிய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். (ஏ வகுப்பு சாரதி உரிமப் பத்திரம்) மற்றும் இப் பதவிக்காக இருக்க வேண்டிய அனுபவமாக ஐ.ரீ.ஏ.ரீ (I.T.A.T.) சான்றிதழ் பெற்றிருக்க வேண்டியதுடன் பார வாகன சாரதியாக 05 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளக் குறியீடு | சம்பளத்திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 2 | மின் தொழில் நுட்பவியலாளர் | 01 | PL3-2016 | ரூ.25,790-10X270-10X300-10X330-12X350-ரூ.38,990 (இச் சம்பளம் உரித்தாவது 2020.01.01 ஆந் திகதி தொடக்கமாவதுடன் 3/2016 சுற்று நிருபத்தின் உப அட்டவணை II இன் ஒழுங்குகளுக்கமைய நியமனம் செயல்படுத்தப்படும் திகதி தொடக்கம் சம்பளம் வழங்கப்படும்.) | *வெளி விண்ணப்பதாரிகளுக்காக*<br>(அ) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இருகளுக்கு மேற்படாது அமர்வு இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பு பாடம் தவிர்த்து) குறைந்த பட்சம் ஒரே அமர்வில் 05 பாடமாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>*உள்ளக விண்ணப்பதாரிகளுக்காக*<br>(ஆ) தற்போது மாகாண சபை அரச சேவையில் உரிய நிறுவனத்தில் நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல்.<br>இந்த நடைமுறைகள் செயற்படும் திகதி ஆகும் போது ஆரம்ப தொழில்நுட்ப பதவிக்காக அமய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்து கொண்டுள்ள பணியாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட அடிப்படையில் அச் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் காணப்பட்ட கல்வித் தகைமைகள் இதற்கு உரித்தாகும்.<br>*தொழில்நுட்ப அறிவு /திறமை மற்றும் அனுபவம்*<br>பதவியின் செயற்பாடுகளுக்கமைய முன்நிலை கல்வி ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்கின்ற தொழில்நுட்ப தொழில் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற N.V.Q. 4 தரத்தில் திறமைச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். மற்றும் ஏற்றுக் கொள்கின்ற நிறுவனத்தில் உரிய துறையில் 03 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.) |
| 3 | மருந்து உதவியாளர் | 01 | PL2 - 2016 | ரூ.25,250-10X270-10X300-10X330-12X350-ரூ.38,450 (இச் சம்பளம் உரித்தாவது 2020.01.01 ஆந் திகதி தொடக்கமாவதுடன் 3/2016 சுற்று நிருபத்தின் உப அட்டவணை II இன் ஒழுங்குகளுக்கமைய நியமனம் செயல்படுத்தப்படும் திகதி தொடக்கம் சம்பளம் வழங்கப்படும்.) | *வெளி விண்ணப்பதாரிகளுக்காக*<br>(அ) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது இரு பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பு பாடம் தவிர்த்து).<br>*உள்ளக விண்ணப்பதாரிகளுக்காக*<br>(ஆ) தற்போது மாகாண சபை அரச சேவையில் உரிய நிறுவனத்தில் நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளக் குறியீடு | சம்பளத்திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| | | | | | அரசினால் அனுமதிக்கப்பட்ட பாட சாலையில் 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தி யடைந்திருத்தல்.<br><br>இந்த நடைமுறைகள் செயற்படும் திகதி ஆகும் போது ஆரம்ப தொழில்நுட்ப பதவிக்காக அமய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்து கொண்டுள்ள பணியாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட அடிப்படையில் அச்சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் காணப்பட்ட கல்வித் தகைமைகள் இதற்கு உரித்தாகும்.<br><br>தொழில்நுட்ப அறிவு / திறமை மற்றும் அனுபவம்<br>பதவியின் செயற்பாடுகளுக்கமைய முன்நிலை கல்வி ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்கின்ற தொழில்நுட்ப தொழில் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற N.V.Q.2 தரம் அல்லது 03 ஆம் மட்டத்திலான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>அனுபவம் :<br>உரிய துறையில் பயிற்சிக் காலம் தவிர்த்து 02 வருட செயல் முறை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். |
| 4 | அலுவலகப் பணி உதவியாளர் | 01 | PL1 -2016 | ரூ.24,250-10X250-10X270-10X300-12X330- ரூ.36,410 (இச் சம்பளம் உரித்தாவது 2020.01.01 ஆந் திகதி தொடக்கமாவதுடன் 3/2016 சுற்று நிருபத்தின் உப அட்டவணை II இன் ஒழுங்குகளுக்கமைய நியமனம் செயல்படுத்தப்படும் திகதி தொடக்கம் சம்பளம் வழங்கப்படும்.) | (அ) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது இரு பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பு பாடம் தவிர்த்து).<br><br>(ஆ) இந்த நடைமுறைகள் செயற்படும் திகதி ஆகும் போது ஆரம்ப தொழில் நுட்ப பதவிக்காக அமய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்து கொண்டுள்ள பணியாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட அடிப் படையில் அச் சந்தர்ப்பத்தில் காணப் பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் காணப்பட்ட கல்வித் தகைமைகள் இதற்கு உரித்தாகும். |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளக் குறியீடு | சம்பளத்திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 5 | சுகாதார தொழிலாளி | 02 | PL1- 2016 | ரூ.24,250-10X250-10X270-10X300-12X330- ரூ.36,410 (இச் சம்பளம் உரித்தாவது 2020.01.01 ஆந் திகதி தொடக்கமாவதுடன் 3/2016 சுற்று நிருபத்தின் உப அட்டவணை II இன் ஒழுங்குகளுக்கமைய நியமனம் செயல்படுத்தப்படும் திகதி தொடக்கம் சம்பளம் வழங்கப்படும்.) | (அ) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது இரு பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பு பாடம் தவிர்த்து).<br><br>(ஆ) இந்த நடைமுறைகள் செயற்படும் திகதி ஆகும் போது ஆரம்ப தொழில் நுட்ப பதவிக்காக அமய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்து கொண்டுள்ள பணியாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட அடிப்படையில் அச்சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் காணப்பட்ட கல்வித் தகைமைகள் இதற்கு உரித்தாகும். |
| 6 | வேலை/கள தொழிலாளி | 02 | PL1- 2016 | ரூ.24,250-10X250-10X270-10X300-12X330- ரூ.36,410 (இச் சம்பளம் உரித்தாவது 2020.01.01 ஆந் திகதி தொடக்கமாவதுடன் 3/ 2016 சுற்று நிருபத்தின் உப அட்டவணை II இன் ஒழுங்குகளுக்கமைய நியமனம் செயல்படுத்தப்படும் திகதி தொடக்கம் சம்பளம் வழங்கப்படும்.) | (அ) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது இரு பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பு பாடம் தவிர்த்து).<br><br>(ஆ) இந்த நடைமுறைகள் செயற்படும் திகதி ஆகும் போது ஆரம்ப தொழில் நுட்ப பதவிக்காக அமய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்து கொண்டுள்ள பணியாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட அடிப்படையில் அச் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் காணப்பட்ட கல்வித் தகைமைகள் இதற்கு உரித்தாகும். |

02. மேற்குறிப்பிடப்பட்ட எல்லா பதவிகளும் வடமேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளுக்கமைய நிருவகிக்கப்படும்.

03. **வயது** : விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் கடைசித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது மாகாண சபை அரச சேவையில் நிரந்தரப் பதவியில் கடமைபுரியும் விண்ணப்பதாரிகளுக்கும் இப் பிரதேச சபையில் அமய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சேவையாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப் படமாட்டாது.

04. **வேறு நிபந்தனைகள் :**

1. எல்லா பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு செய்து கொள்வதற்காக தாபனக் கோவையில் II ஆம் அத்தியாயத்தில் 10 தொடக்கம் 12 வரையிலான பிரிவுகள் உரித்தாகும்.
2. விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் கடைசித் திகதிக்கு 3 வருடங்களுக்கு குறையாத காலத்தினுள் நாத்தாண்டிய பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வதியுனராக இருத்தல் வேண்டும்.
4. நல்லொழுக்கமும் தேகாரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.
5. தண்டனை விதிக்கோவைப்படி நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருத்தலாகாது.

05. **நியமனத்தின் தன்மை :**

1. இப்பதவி நிரந்தரமானது. அரச உத்தியோகத்தர்களுக்காக 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் செயற்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற ஓய்வூதிய திட்டம் உங்களுக்கு உரித்துடையதாகும். 03 ஆண்டு காலத்திற்கு நன்னடத்தை காலமாகும்.

06. பதவிக்காக விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்க்கின்ற விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவப் படி ஒழுங்கமைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை 2018.09.05 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு "செயலாளர், நாத்தண்டிய பிரதேச சபை, நாத்தண்டிய" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து பொறுப்படைக்கலாம்.

07. ஒரு பதவிக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் அதற்காக வெவ்வேறாக விண்ணப்பப் படிவம் அனுப்ப வேண்டும்.

08. விண்ணப்பப் படிவத்துடன் கீழ், குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டியதுடன். நேர்முகப் பரீட்சையின் போது முதல் பிரதியினை சமர்பித்தல் வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழ்;
2. தேசிய ஆளடையாளட்டை;
3. கல்விச் சான்றிதழ்;
4. வதிவினை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ் (கிராம சேவகரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்);
5. அண்மையில் பெற்றுக்கொண்ட நல்லொழுக்கம் பற்றிய சான்றிதழ் இரண்டு (இதில் ஒன்று கிராம அலுவலரினால் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்);
6. தொழில் அனுபவம் மற்றும் வேறு தகைமைகள் அடங்கிய சான்றிதழ்.

**ஆட்சேர்க்கும் முறை :**
அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக் குழுவின் பரிந்துரையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்துக் கொள்ளப்படும். தற்போது இப் பிரதேச சபையில் அமய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் கடமை புரியும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவம் கோரப்பட்டதன் பின்பு அல்லது கோரப்படும் சந்தர்ப்பத்தில் இவ் ஆள் சேர்ப்பினை காலதாமதப்படுத்தல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது இவ் அறிவித்தலினை இரத்துச் செய்தல் அல்லது திருத்தம் செய்தல் என்பவற்றிற்கான பூரண அதிகாரம் நாத்தாண்டிய பிரதேச சபைச் செயலாளருக்குரித்தானதாகும்.

கே. பி. சந்தன குமார,
செயலாளர்,
நாத்தாண்டிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
நாத்தாண்டிய,
2018, யூலை 31.

## நாத்தாண்டிய பிரதேச சபை

.................................................... பதவிக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :- ..........................................................................................................
2. முகவரி :- ........................................................................................................................
3. தொலைபேசி இலக்கம் :- ..........................................................................................................................................................
4. பிறந்த திகதி :- வருடம் :- ...................... மாதம் :-...................... திகதி :-......................
5. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :- ....................................................
6. இனம் :- ...........................................................................
7. திருமணமானவரா? /திருமணமாகாதவரா? ....................................................................
8. ............................................ ஆந் திகதிக்கு வயது :- ........................................................
   வருடங்கள் :- ......................... மாதங்கள் :- ......................... நாட்கள் :- .........................
9. நீங்கள் இலங்கை பிரசையா? அவ்வாறாயின், பரம்பரையாகவா ? இல்லையாயின், பதிவு செய்யப்பட்டத்தினாலா என்பது பற்றி ? ..................................................................
10. ஆண் / பெண் தன்மை : ......................................................................
11. கல்வித் தகைமைகள் (பிரதிகளை இணைத்தல் வேண்டும்):- .........................................................
12. வேறு தகைமைகள் : ..................................................................
13. அனுபவம் :- ........................................................................................................................................
14. பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் நிரந்தர குடியிருப்பிற்கான கால எல்லை :
    ............................................... தொடக்கம் ................................................ வரை
15. முன்பு சேவை புரிந்த இடம் : ................................................
16. ஏதாவதொரு குற்றச் செயலுக்கு எப்போதாவது நீதிமன்றத்தில் குற்றவாளியாகி உள்ளதாயின் அக் குற்றமும் பெற்ற தண்டனையும் பற்றி விபரிக்கவும் : ..........................................................................................................................................................
    .........................................................................................................................................................

இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும், பிழையற்றதும் என்றும் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதும், பிழையானதும் என்றும் இந்த பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெியவரின் நான் தகுதியற்றவர் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து விலக்க முடியும் என்றும் எனக்குத் தெரியும். விண்ணப்பப் படிவம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு உடன்படுகின்றேன் என்று உறுதிப்படுத்துகின்றேன்.

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளது.

01. பிறப்புச் சான்றிதழ்;
02. கல்விச் சான்றிதழ்;
03. வேறு தகைமைகள் உள்ளடங்கும் சான்றிதழ்கள்;
04. சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ் ;
05. நிரந்தர குடியிருப்பினை உறுதிப்படுத்தும் சான்றிதழ் (கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ்);
06. அண்மையில் பெற்றுக் கொண்ட நற்சான்றிதழ்கள் இரண்டு.

.......................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : ..........................................................

தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

விண்ணப்பதாரியாகிய திரு./திருமதி/செல்வி ...................................... என்பவர் .......................................... திகதி தொடக்கம் இந் நிறுவனத்தில் ................................... ஆக சேவை புரிகிறார். அவர் எவ்வித தண்டனைகளுக்கும் உள்ளாகவில்லை என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

.......................................................
திணைக்கள/நிறுவகத் தலைவரின் அல்லது
அதிகாரமுள்ள உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் : .....................................................

பதவிப் பெயர் : .....................................................

திணைக்களம் / நிறுவனம் : .....................................................

(பதவி முத்திரையினை இடவும்) : .....................................................

திகதி : .........................................................

08-647

---

**பியகம பிரதேச சபை**

**மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிலுள்ள வெற்றிடங்களை நிரப்புதல்**

01. பியகம பிரதேச சபையிலுள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | பதவி | வெற்றிடங் களின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வித் தகைமைகள் | தொழில் தகைமைகளும் அனுபவமும் |
|---|---|---|---|---|---|
| 01 | மயானவாடி இயக்குநர் iii (ஆரம்ப அரை திறன் சார்நத) | 02 | PL 2- 2016 ரூ. 25,250 - 10X270 - 10X300 - 10X330 - 12X350 - ரூ. 38450 (பொ. நி. சு. 03/2016 இன் பிரகாரம்) | உள்வாரி (மட்டுப்படுத்தப்பட்ட) குறைந்தபட்சம் தரம் 8/ 9 ஆண்டுகள் கழிய வேண்டும். <br><br> வெளிவாரி (திறந்த) குறைந்தபட்சம் தரம் 8/ 9 ஆண்டுகள் கழிய வேண்டும் | உள்வாரி (மட்டுப்படுத்தப்பட்ட) <br> தேசிய வாழ்கைத் தொழில் தகைமைகளில் (NVQ) ஆகக் குறைந்தது இரண்டாம் மட்டப் பரீட்சையிலாவது சித்தியடைந்திருத்தல் அல்லது ஆகக் குறைந்தது உரிய துறையில் 06 மாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் (சான்றிதழின் மூலம் நிரூபிக்கப்படுதல் வேண்டும்.) <br> அனுபவம் <br> ஒரு உள்ளூராட்சி சபையில் ஒரு ஆரம்ப மட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் தடைதாண்டல் பரீட்சைகளில் சித்தியடைந்து 05 வருட நிரந்தர திருப்தியான ஒரு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த ஒரு ஊழியராக இருத்தல். <br><br> வெளிவாரி (திறந்த) <br> தேசிய வாழ்கைத் தொழில் தகைமைகளில் (NVQ) ஆகக் குறைந்தது இரண்டாம் மட்டப் பரீட்சையிலாவது சித்தியடைந்திருத்தல் மற்றும் ஆகக் குறைந்தது உரிய துறையில் 06 மாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் (சான்றிதழின் மூலம் நிரூபிக்கப்படுதல் வேண்டும்.) |

***02. ஆட்சேர்ப்புத் திட்டம்***

*அடிப்படைக் கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக, கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சயின் போது தொழில் தகைமைகள், குறித்த பதவி பற்றிய செயன்முறை ரீதியான அறிவு, நடைமுறை விவகாரங்கள் பற்றிய அறிவு, ஆளுமை முதலிய அம்சங்கள் கருத்திற்கொள்ளப்படும். பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.*

***03. வயது***

*விண்ணப்பம் எற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிற்கு 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அரச அல்லது அரச மாகாண சேவைகளில் ஏற்கனவேயுள்ளவர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).*

***04. ஏனைய தகைமைகள்***

(i) *விண்ணப்பதாரர்கள் பரம்பரையாக அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜைகளாக இருத்தல் வேண்டும்.*
(ii) *உயர்ந்த நல்லொழுக்கும்ம் உடலாரோக்யமும் இருத்தல் வேண்டும்.*
(iii) *விண்ணப்பங்கள் அழைக்கப்படும் திகதிற்கு மேல் மாகாணத்தில் மூன்று வருட காலம் நிரந்தரமாக வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும் (வதிவிடம் தேர்தல் இடாப்பினால் கிராம அலுவலரினால் (கி. அ.) /பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்டுள்ள கான்றிதழ் மூலம் நிரூபிக்கப்படுதல் வேண்டும்.)*
(iv) *அரச/மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்பட்ட ஒருவராக, 44/90 ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கையின் கீழ் ஓய்வூதியத்தைப் பெறும் ஒருவராக இருத்தல் ஆகாது.*
(v) *விண்ணப்பதாரர்கள் தண்டனை விதிக்கோவையின் பிரகாரம் ஏதாவது ஒரு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்க தண்டிக்கப்பட்டிருத்தல் ஆகாது.*
(vi) *தேவை எழும் பட்சத்தில் பிணைமுறியை அல்லது காப்புறுதி சான்றிதழை சமர்ப்பிப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.*

***05. பொது நிபந்தனைகள்***

a. *கடமைகளை நிறைவேற்றுவதற்கு உடலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பொருத்தமுடையவராகவும் நல்ல உடலாரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.*
b. *இந்தப் பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். (ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு இயைந்தொழுக வேண்டும்).*
c. *நியமனம் மூன்று வருட நன்நடத்தை காலத்திற்கு உட்பட்டதாக இருக்கும்.*
d. *நன்னடத்தை கால முடிவில் பணியில் நிரந்தரமாக்கல் கருத்திற்கொள்ளப்படும்.*
e. *நியமனத் திகதியிலிருந்து 3 வருடங்களுக்கு முன்னர் வினைத்திறன் கான் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.*
f. *அரசாங்கத்தின் மொழிக் கொள்கைகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.*
g. *பதவிற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பம் அழைக்கப்படும் இறுதித் திகதிற்கு பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.*
h. *நீங்கள் சமர்ப்பித்த கல்வித் தகைமைகள், ஏனைய தகைமைகள் என்பன பொய்யானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டால் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னரும் கூட எந்தவிதமான அறிவித்தலுமின்றி உங்களின் நியமனம் முடிவுறுத்தப்படும்.*
i. *இவை தவிர, தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள், நிதிப் பிரமாணக்குறிப்புகள், மேல் மாகாண சபையின் கௌரவ ஆளுநரினால் விடுக்கப்படும் ஏதாவது கட்டளைகள், மற்றும் மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அவ்வப்பொழுது விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் திணைக்களக் கட்டளைகள் என்பவற்றுக்கும் இயைந்தொழுக வேண்டும்.*

***06. விண்ணப்பங்கள்***

*இந்த அட்டவணையில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தானாகத் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் 2018.08.31 ஆந் திகதிற்கு முன்னர் "செயலாளர், பியகம பிரதேச சபை, தெல்கொட" என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை விண்ணப்பத்தைத் தாங்கி வருகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும். இறுதித் திகதிற்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் தபாலில் தொலைந்து போன விண்ணப்பங்களுக்கு பொறுப்புக்கூறப்பட மாட்டாது.*

*07. தகுதியான விண்ணப்பங்களை அனுப்பியவர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.*

*08*. பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பங்களோடு இணைத்து அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

a. பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
b. கல்விச் சான்றிதழ்கள்
c. தேசிய அடையாள அட்டையின் பிரதி
d. வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தப்பட்டு பிரதேச செயலாளரினால் புறக்குறிப்பிடப்பட்ட கடிதம்
e. இரண்டு நட்சான்றிதழ் பத்திரங்கள் (ஒரு கான்றிதழ் வசிக்கும் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதாக இருத்தல்)
f. தொழில் தகைமைகளையும் ஏனைய தகைமைகளையும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
g. தொழிலை உறுதிப்படுத்தும் திணைக்கள தலைவரின் சான்றிதழ்

*09*. மேல் மாகாண சபையிலுள்ள இந்தப் பதவிகளுக்கான ஆட்சோப்பு நடைமுறைகளையும், நியதிச்சட்டங்களையும் திருத்துதல், ஆட்சேர்ப்பை தாமதித்தல், நடைமுறைகளை பிரதியீடு செய்தல், மாற்றுதல், இந்த அறிவித்தலை இரத்துச்செய்தல் முதலிய அனைத்துக்குமான அதிகாரத்தத்துவம் பியகம பிரதேச சபையின் செயலாளருக்குரியதாகும்.

வசந்தி விக்ரமரட்ன,
பியகம பிரதேச சபையின் செயலாளர்.

*2018, ஓகத்து 02.*

மாதிரி விண்ணப்பப் படிவம்

**பியகம பிரதேச சபை**

................................. பதவிக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரியின் பெயர் /(முதலெழுத்துக்களுடன்) : ..................................................
முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :..................................................
2. விலாசம் :..................................................
3. பிறந்த திகதி : ஆண்டு ................... மாதம் ...................... திகதி ...................
4. விண்ணப்ப இறுதித் திகதிற்கு வயது : ஆண்டு ............... மாதம் ................. நாள் ........................
5. சிவில் அந்தஸ்து :.................................
6. தேசிய இனம் : .................................
7. நீங்கள் இலங்கைப் பிரஜையா? பதிவுமூலமா .................. வம்சா வழியிலா ......................
8. கல்வித் தகைமைகள் : ...............................
9. தொழில் தகைமைகள் : .................................
10. அனுபவம் தாபனம் ....................... பதவிப் பெயர் .................... சேவை காலம் ........................
11. நீங்கள் இதே பிரதேச சபைக்கு ஏற்கெனவே இணைக்கப்பட்டுள்ளீர்களாயின்.
(i) தற்போதைய பதவி ......................
(ii) நியமனத் திகதி .......................
(iii) நியமனத்தின் வகை (நிரந்தரம் /அமய/இரண்டாம்நிலை /ஒப்பந்த)

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என சான்றளிக்கின்றேன். இதில் அடங்கியுள்ள ஏதாவது விபரங்கள் இந்தப் பதவியிற்கு நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் பிழை அல்லது பொய்யானது எனக் கண்டு

பிடிக்கப்பட்டால் தகுதியற்வனாவேன் என்றும் நியமனத்தின் பின்னர் அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டால் எந்தவிதமான நஷ்டஈடுகளுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாகுவேன் என்றும் நன்கறிவேன்.

திகதி ............................................ விண்ணப்பதாரரின் கையொப்பம் ............................................

8 - 675

---

**வத்தேகம நகரசபை**

*மத்திய மாகாண சபை அரச சேவையில் வத்தேகம நகர சபைக்கு சாரதி/அலுவலக பணியாளர்/நூலக உதவியாளர்/ சுகாதார ஊழியர் பதவிகளுக்கு ஆட்சேர்த்தல்*

மத்திய மாகாண சபை அரச சேவையில் வத்தேகம நகர சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ்க் காணப்படும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக இவ்விளம்பரத்தில் காணப்படும் தகுதிகளுடைய வத்தேகம நகர சபை மற்றும் பாததும்பர பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வாழ்பவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் விளம்பரத்தில் இறுதியில் காணப்படும் விண்ணப்பப் படிவத்திற்கமைய வடிவமைக்கப்பட்ட விண்ணப்பம் 2018.09.19 ஆந் திகதிக்கு முன் "செயலாளர், வத்தேகம நகர சபை, வத்தேகம" எனும் முகவரிக்கு கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதவுறையில் இடது பக்க மேல் மூலையில் வத்தேகம நகர சபையில் (விண்ணப்பிக்கும் பதவி) பதவிக்குரிய விண்ணப்பம் எனக் குறிக்கப்பட வேண்டும். வத்தேகம நகர சபையில் தற்போது சேவையில் இருக்கும் நிரந்தர/நியமன வேலை பார்ப்பவர்களுக்கு மற்றும் நகர சபை எல்லைக்குள் வாழ்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| பதவிப் பெயர் | | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| சாரதி | - III ஆம் தரம் | 01 |
| அலுவலக பணிப்பாளர் | - III ஆம் தரம் | 01 |
| நூலக உதவியாளர் | - III ஆம் தரம் | 01 |
| சுகாதார ஊழியர் | - III ஆம் தரம் | 01 |

**சாரதி பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக கல்வி மற்றும் வேறு தகைமைகள்:**

01. சேர்க்கும் முறை :

1.1 சேர்க்கும் விகிதம்

| வகுப்பு | விகிதம் |
|---|---|
| திறந்த (வரையறுக்கப்படாத) | 70% |
| வரையறுக்கப்பட்ட | 30% |

1.2 திறந்த (வரையறுக்கப்படாத) சேர்ப்பு

1.2.1 சேர்க்கும் தரம் : III ஆம் தரம்

1.2.2 தகைமைகள்

1.2.2.1 கல்வித் தகைமைகள் : க. பொ. த. (சா.த.) பரீட்சையில் 2 தடவைக்கு மேற்படாத அமர்வில் குறைந்தது 2 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் ஒரே தடவையில் 5 பாடங்கள் சித்தியடைந்திருக்க வேண்டும்.

1.2.2.2 தொழில் தகைமைகள் : மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரினால் வெளியிடப்பட்ட ஒவ்வொரு பிரிவுடைய வாகன ஓட்டும் அனுமதிப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.
B1, B, C1, C, CE, DI, D, G1, G

1.2.2.3 அனுபவம் : மோட்டார் வாகனம் ஒட்டும் அனுமதிப் பத்திரத்தைப் பெற்ற பின் குறைந்தது 3 வருட அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும். (அனுபவத்தை அத்தாட்சிப் பத்திரங்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)

1.2.2.4 உடற் தகைமை :

(i) அனைத்து விண்ணப்பதாரிக்கும் கண் பார்வை நன்றாக இருக்க வேண்டும். பகல் மற்றும் இரவு நேர வேலை செய்வதற்குப் போதுமான உள மற்றும் உடற் தகைமை இருக்க வேண்டும்;

(ii) குறைந்த உயரம் 5 அடி 2 1/2 அங்குலமாக இருக்க வேண்டும்;

1.2.2.5 ஏனையவை

(i) பரம்பரையான அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி குறிப்பிட்ட மாகாண சபை எல்லைக்குள் 03 வருடத்திற்குக் குறையாத பதிவில் இருக்க வேண்டும்;

(iii) பாதை ஒழுங்கு சட்ட விதிகளைப் பற்றி நன்கறிந்திருக்க வேண்டும்;

(iv) சேர்ப்பதற்காக வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் கோரும் திகதிக்குத் தேவைப்படும் சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

1.2.3 வயது :

1.2.3.1 குறைந்த எல்லை : 18 வயது
1.2.3.2 கூடிய எல்லை : 45 வயது

1.2.4 சேர்க்கும் முறை : எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய அதிக புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரியின் தொழிற் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய தேவைப்படும் சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருக்கும் விண்ணப்பதாரிகளுள் அதிக புள்ளி பெற்றவர்களின் வரிசைப்படி சேர்க்கப்படும்.

1.2.4.1 எழுத்துப்பரீட்சை : மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் அல்லது தகுதி பெற்ற அதிகாரி ஒருவரினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய அதிக புள்ளி பெற்ற விண்ணப்ப தாரிகளுள் இருக்கும் வெற்றிடத்திற்கமைய தொழிற் பரீட்சைக்கு அழைக்கப்படும்.

2.4.1.2 தொழிற் பரீட்சை :

| பரீட்சித்து புள்ளிகள் தரப்படும் தலைப்புகள் | அதிகப் புள்ளிகள் | சித்தி பெறத் தேவைப்படும் குறித்த புள்ளிகள் |
|---|---|---|
| 1. வாகனம் ஓட்டும் தேர்ச்சி | 40 | எழுத்துப் பரீட்சையில் மொத்தப் புள்ளி 40% அல்லது அதற்கு மேலதிகமாகப் பெற்றுக் கொண்டவர்களை மாத்திரம் செயன்முறைப் பரீட்சைக் குழுவினால் நடாத்தும் வாகன ஓட்டும் தேர்ச்சி மட்ட தொழிற் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். தேவைப்படும் சகல தகைமைப் பரீட்சைகளுக்குத் தோற்றிய அதிக புள்ளி பெற்றவர்களுள் தேர்ச்சி மட்ட வரிசைப் படி சேர்க்கப்படும். |
| 2. பாதைச் சட்டங்கள் பற்றிய செயன்முறை அறிவு | 40 | |
| 3. மோட்டார் இயந்திர விஞ்ஞானத்தைப் பற்றிய அடிப்படை அறிவு | 20 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

1.3 வரையறுக்கப்பட்ட சேர்ப்புகள் : தற்போது குறிப்பிட்ட மாகாண சபையில் பதவியில் இருக்கும் அடிப்படைத் தகைமைகள் பூர்த்தி செய்திருக்கும் சேவையாளர்களுக்குப் பொருந்தும்.

1.3.1 சேர்க்கும் தரம் : III ஆம் தரம்

1.3.2 தகைமைகள் :

1.3.2.1 கல்வித் தகைமைகள் : க.பொ.த. (சா.த.) பரீட்சையில் 2 முறைக்கு மேலல்லாத அமர்வில் குறைந்தது 2 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் ஒரு தடவையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

1.3.2.2 தொழில் தகைமைகள் : மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரினால் வெளியிடப்பட்ட ஒவ்வொரு பிரிவுடைய வாகன ஓட்டும் அனுமதிப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

1.3.2.3 அனுபவம் : மோட்டார் வாகனம் ஓட்டும் அனுமதிப் பத்திரத்தைப் பெற்ற பின் குறைந்தது 3 வருட அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும். (அனுபவத்தை அத்தாட்சிப் பத்திரங்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)

1.3.2.4 உடற் தகைமை :

(i) அனைத்து விண்ணப்பதாரிக்கும் கண் பார்வை நன்றாக இருக்க வேண்டும். பகல் மற்றும் இரவு நேர வேலை செய்வதற்குப் போதுமான உள மற்றும் உடற் தகைமை இருக்க வேண்டும்.

(ii) குறைந்த உயரம் 5 அடி 2 1/2 அங்குலமாக இருக்க வேண்டும்.

1.3.2.5 ஏனையவை :

(i) பரம்பரையான அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரி குறிப்பிட்ட மாகாண சபை எல்லைக்குள் 03 வருடத்திற்குக் குறையாத பதிவில் இருக்க வேண்டும் ;

(iii) பாதை ஒழுங்கு சட்ட விதிகளைப் பற்றி நன்கறிந்திருக்க வேண்டும் ;

(iv) சேர்ப்பதற்காக வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் கோரும் திகதிக்குத் தேவைப்படும் சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

1.3.3 வயது :

1.3.3.1 குறைந்த எல்லை : 18 வயது

1.3.3.2 கூடிய எல்லை : குறிப்பிட்ட மாகாண சபை எல்லைக்குள் சேவையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு கூடிய வயதெல்லை தேவைப்படாது.

1.3.4 சேர்க்கும் முறை : உள, உடல், கல்வி மற்றும் தொழிற்தகைமைகள் பரீட்சிப்பதற்காக நடாத்தும் நேர்முகப் பரீட்சையில் மற்றும் விவேக நேர்முகப் பரீட்சையில் பெறுபேறுகளின் அடிப்படையில் மோட்டார் வாகன பரீட்சகரினால் நடாத்தும் செயன்முறை பரீட்சையில் தகைமை பெற வேண்டும்.

*1.3.4.1* **விவேகப் பரீட்சை**

*1.3.4.1. 2* புள்ளி வழங்கும் முறை

| பரீட்சித்து புள்ளிகள் தரப்படும் தலைப்புகள் | அதிகப் புள்ளிகள் | சித்தி பெறத் தேவைப்படும் குறித்த புள்ளிகள் |
|---|---|---|
| 1. வாகனம் ஓட்டும் தேர்ச்சி | 40 | எழுத்துப் பரீட்சையில் மொத்தப் புள்ளி 40% அல்லது அதற்கு மேலதிகமாகப் பெற்றுக் கொண்டவர்களை மாத்திரம் செயன்முறைப் பரீட்சைக் குழுவினால் நடாத்தும் வாகன ஓட்டும் தேர்ச்சி மட்ட தொழிற் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். தேவைப்படும் சகல தகைமைப் பரீட்சைகளுக்குத் தோற்றிய அதிக புள்ளி பெற்றவர்களுள் தேர்ச்சி மட்ட வரிசைப்படி சேர்க்கப்படும். |
| 2. பாதை சட்டங்கள் பற்றிய செயன்முறை அறிவு | 40 | |
| 3. மோட்டார் இயந்திர விஞ்ஞானத்தைப் பற்றிய அடிப்படை அறிவு | 20 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

சம்பள முறை : பொ.நி.சு. 3/2016, ரூபா 25,790 - 270x10 - 300x10 - 330x10 - 350x12 - ரூபா. 38,990/-
(2018 ஆம் ஆண்டுக்கான ஆரம்ப சம்பளம் ரூபா 20,462.00)

02. ஏனைய பதவிகளுக்குரிய கல்வித் தகைமைகள் ( கலை அல்லாத):

| பதவிப் பெயர் | வெற்றிட எண்ணிக்கை | வேதன அளவுத் திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|
| அலுவலக பணியாளர் தரம் III | 01 | பொ.நி.சு. 3/2016, ரூபா 24,250 - 250 X 10 - 270 X 10 - 300 X 10 - 330 X 12 -ரூபா 34,410 (2018 ஆம் ஆண்டுக்கான ஆரம்ப சம்பளம் ரூபா 19,242.00) | க.பொ.த. (சா.த) பரீட்சையில் இரு தடவைக்கு மேலல்லாத அமர்வில் குறைந்தது 2 பாடங்களில் C தேர்ச்சியுடன் 6 பாடங்கள் சித்தியடைந்திருக்க வேண்டும். இதில் 5 பாடங்கள் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும். |
| நூலக உதவியாளர் தரம் III | 01 | பொ.நி.சு. 3/2016, ரூபா 24,250 - 250 X 10 - 270 X 10 - 300 X 10- 330 X 12 -ரூபா 34,410 (2018 ஆம் ஆண்டுக்கான ஆரம்ப சம்பளம் ரூபா 19,242.00) | க.பொ.த.(சா.த) பரீட்சையில் இரு தடவைக்கு மேலல்லாத அமர்வில் குறைந்தது 2 பாடங்களில் C தேர்ச்சியுடன் 6 பாடங்கள் சித்தியடைந்திருக்க வேண்டும். இதில் 5 பாடங்கள் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும். பயிற்சி பெற்றிருக்கும் விண்ணப்பதாரிகள் மீது கவனம் செலுத்தப்படும். |
| சுகாதார ஊழியர் தரம் III | 01 | பொ.நி.சு. 3/2016 ரூபா 24,250 - 250 X 10 - 270 X 10 - 300 X 10 - 330 X 12 -ரூபா 34,410 (2018 ஆம் ஆண்டுக்கான ஆரம்ப சம்பளம் ரூபா 19,242.00) | க பொ.த. (சா.த) பரீட்சையில் இரு தடவையில் மேலல்லாத அமர்வில் குறைந்தது 2 பாடங்களில் C தேர்ச்சியுடன் 6 பாடங்கள் சித்தியடைந்திருக்க வேண்டும் இதில் 5 பாடங்கள் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.<br>தகைமை பெறாத விண்ணப்பதாரிகள் இருக்கும் போது 5 ஆம் ஆண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களை கவனிக்கப்படும். |

03. சேவைக்கு சேர்த்துக்கொள்வது மாகாண சபையின் சம்பந்தப்பட்ட அதிகாரியினால் செய்யப்படும்.

ஏனைய பதவிகளுக்கு சேர்த்துக்கொள்ளும் முறை;

மத்திய மாகாண சபை ஆணையாளரினால் குறிப்பிடும் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய.

**சேவையில் நியமிப்பதற்கான பொது நியதிகள் :**

- இப்பதவி நிரந்தரமானது ஓய்வூதியம் உடையது. அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை சார் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். விதவை/அநாதை, தபுதாரர்/அநாதை ஓய்வூதிய முறையில் அங்கத்துவம் பெற வேண்டும்.

- அவ்வாறே அரச வேலை நியமனத்திற்குரிய மற்றைய நியதிகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.

- அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்காகவும் விசேஷமாக அரசாங்க மொழி சட்டடக் கோவையின் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்காகவும் தற்போது அமைத்திருக்கும் மற்றும் எதிர் காலத்தில் அமைக்க இருக்கும் சட்டங்களை ஏற்று நடக்க வேண்டும்.

- நியமிக்கப்பட்டவர்கள் 3 வருட நன்னடத்தைக் காலத்திற்கு உள்ளடங்குவதுடன், அக் காலத்திற்குள் வேலை, நடத்தை, வரவு மகிழ்ச்சிக்குரிய முறையில் இல்லாவிடின் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

- ஆட்சேர்ப்பிற்கு அவசியமான தகுதிகள், விண்ணப்பம் கோருவதற்கான அறிவித்தல்/வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளன. சகல தகுதிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. பூர்த்தியாக்கப்பட்டிருக்க வேண்டும்.

**ஏனைய பொது நியதிகள் :**

- இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும். விண்ணப்பதாரி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று உரிய நகர சபை எல்லைக்குள்/பிரதேச சபை எல்லைக்குள் 03 வருடத்திற்குக் குறையாத கால நிரந்தர பதிவைக் கொண்டவராக இருக்க வேண்டும்.

- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். எனினும், ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வுச்ச வயதெல்லை ஏற்புடையன்று.

- விண்ணப்பதாரிகள் பரம்பரையாக அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.

- நன்னடத்தையுடன் சிறந்த தேகாரோக்கியம் உடையவராக இருக்க வேண்டும்.
தேர்ந்தெடுக்கப்பட்டால் ஒரு மாதத்திற்குள் அரச வைத்தியரினால் நடாத்தப்படும் வைத்தியப் பரீட்சைக்கு உட்பட்டு, அதில் தேகாரோக்கியத்தில் சிறந்தவராக தேர்ந்தெடுக்கப்படாவிடின் பதவியில் இருந்து நீக்கப்படுவார்.

- குற்றவியல் வழக்கில் நீதி மன்றத்தினால் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டவராக இல்லாதிருத்தல்.

- விண்ணப்பதாரி விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வத்தேகம நகர சபை எல்லைக்குள் 03 வருடத்திற்குக் குறையாத கால நிரந்தர பதிவைக் கொண்டவராக இருக்க வேண்டும் ( பதிவுத் தேர்தல் வாக்குப் பதிவேட்டின் மூலமோ, பிரதேச செயலாளரின் அத்தாட்சிப் பத்திரம் மூலமோ உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

- அரச சேவையில் அல்லது மாகாண சேவையில் சேவை இழிவுக்கு உட்பட்டில்லாதவராகவும், அரச சுற்றறிக்கை 4490 இன் கீழ் ஓய்வூதியம் பெறாதவராகவும் இருக்க வேண்டும்.

- அரச சேவையில் அல்லது மாகாண சேவையில் உள்ளவர்கள் விணணப்பிக்கும் இறுதித் திகதிக்கு முந்திய 5 வருட காலத்திற்குள் குற்றத்திற்கு (முன்னெச்சரிக்கை அல்லாது) தண்டனை பெறாதவராகவும், உரிய சம்பள ஏற்றத்தை உரிய திகதியில் பெற்றவராகவும் கொண்ட மகிழ்ச்சிகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டால் விதவை/ தபுதாரன்/அநாதை ஓய்வூதியத் திட்டத்தில் தொடர்ந்ததும் அங்கத்தவராக இருக்க வேண்டும்.

- வேறு நியதி அமைப்புத் திட்டங்களுக்கு அமைய விண்ணப்பதாரி முப்படை அல்லது பாதுகாப்புச் சேவையில் இருந்தால் முறைப்படி சேவையிலிருந்து விலகியவராக இருக்க வேண்டும்.

- இந்த நியமன நியதியும், கொள்கைகளுக்கும் மேலதிகமாக இலங்கைக் குடியரசின் தாபனக் கோவையின் நியதிகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்கள ஏற்பாடுகளுக்கும் மத்திய மாகான சபை, வத்தேகம நகர சபையினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் நியதி, ஏற்பாடுகளுக்கு ஏற்ப சேவை செய்ய கடமைப்பாடும் உள்ளது.

- எந்தவொரு பதவிக்கும் மதகுருமார்களுக்கு விண்ணப்பிக்க முடியாது.

- இந்த ஆட்சேர்ப்பு அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத இவ்விடயம் தொடர்பாகவும், வத்தேகம நகர சபை செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

- தற்போது அரச சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகள் தனது திணைக்களத் தலைவரினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

இவ்வறிவித்தலில் உள்ள விண்ணபத்தை சரியாகப் பூரணப்படுத்தி கீழ்க் காணப்படும் அத்தாட்சிப் பத்திரங்களில் பிரதிகளை இணைத்து 2018.09.19 ஆந் திததிக்கு முன் எனக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

1. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ;
2. கல்வி அத்தாட்சிப் பத்திரம் ;
3. வசிப்பதை உறுதி செய்வதற்கான பிரதேச செயலாளரின் அத்தாட்சிப் பத்திரம் ;
4. அண்மையில் பெற்றுக் கொண்ட நன்னடத்தை அத்தாட்சிப் பத்திரம் ;

பீ. எஸ். பீ. மடுகல்லே.,
செயலாளர்,
வத்தேகம நகர சபை.

வத்தேகம நகர சபை,
2018, ஓகத்து 06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண அரச சேவை**

வெற்றிடங்களை நிரப்புதல்
................................................................ **பதவிக்கான விண்ணப்பம்**

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் : ........................................................................................
   (ii) முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள் :..................................................................

2. நிரந்தர முகவரி : ....................................................................................................................

3. நிரந்தர வசிப்பிட மாவட்டம் : .....................................................................................................

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................

5. பிறந்த திகதி : ஆண்டு : .......................... மாதம் : ..............................திகதி : .............................

6. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது : வருடங்கள் : .............. மாதங்கள் : ....................
நாட்கள் :........................

7. ஆண்/பெண் : ................................................................................................

8. திருமணமானவரா/திருமணமாகாதவரா : ..............................................................................

9. இலங்கைப் பிரஜையாவது பிறப்பின் மூலமா? பதிவின் மூலமா? : .........................................................

10. கல்வித் தகைமைகள் : (பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

க. பொ. த. (சா.த.)பரீட்சை

வருடம் :- சுட்டெண்:-

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

11. (i) வேறு கல்வித் தகைமைகள் : ................................................................................
(ii) தொழில் தகைமைகள் : ................................................................................
(iii) சேவை அனுபவம் : ................................................................................

12. நீங்கள் இப்போதும் இந்த நகர சபையில் சேவையாற்றுபவராக இருந்தால் பதவி : ..........................................
நிரந்தர/தற்காலிக/அமைய/ஒப்பந்த அடிப்படையிலா : ........................................................................
பதவியில் இணைந்த திகதி: ......................................................

13. நீங்கள் எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? : ................................................
ஆம் எனின் அது சம்பந்தமான விபாரங்கள் ............................................................................

.................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி ................................

தற்போது அரச சேவையில் கடமையாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு திணைக்களத் தலைவரது சான்றுரை

திரு./திருமதி/செல்வி ............................................................ என்பவர் இந்தத் திணைக்களத்தில் ................................... இந்தப் பதவியில் கடமைாற்றுகின்றார் எனவும், இவர் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்படுவாராயின் தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும், இவர் எந்தவித ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் ( எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகாதவர் எனவும் இத்தால் உறுதிப்படுத்துவதுடன் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கிறேன்.

.......................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி : ..........................

(பதவி முத்திரை இடப்பட வேண்டும்)

8 - 783

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## நாரம்மல பிரதேச சபை

### மெடியகனே கிறிஸ்தவ தேவாலயத்தின் பொது மயானத்தினை நிர்மாணிப்பதற்கு ஆட்சேபணை தெரிவித்தல்

*நாரம்மல பிரதேச சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட நாரம்மல பிரதேச செயலகப் பிரிவின் 1053 கிவுல்கல்ல கிராம அலுவலர் பிரிவின் மெடியகனே கிராமத்தில் அமைந்துள்ள மெடியகனே கிறிஸ்தவ தேவாலயத்துக்கு உரித்தான காணியினுள் கிறிஸ்தவ மதக் கிரியைகளுக்கு ஏற்ப அடக்கம் செய்வதற்கான மயானமொன்றினை தயார்படுத்தித் தருமாறு சிரிகல, வணக்கத்துக்குரிய பங்குத் தந்தை அவர்கள் மற்றும் பிரதேச மக்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆகையால் வரைபடம் 12220 ஆம் இலக்கத்தையுடைய நில வரைவுப்படிவத்தின் மற்றும் உறுதி இலக்கம் 13081 இனையுடைய கொடை உறுதிப் பத்திரத்தினால் மயானத்தினை நிர்மாணிப்பதற்காக பேர்ச்சஸ் 15 இனையுடைய காணிப் பகுதியொன்று நாரம்மல பிரதேச சபைக்கு உரிமை மாற்றப்பட்டுள்ளதால் 1946 ஆம் ஆண்டு இல. 57 இனைக் கொண்ட பொது மயானம் மற்றும் தனியார் மயான பூமிக் கட்டளைச் சட்டத்தினால் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப 2018.07.03 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட நாரம்மல பிரதேச சபை பொதுக் கூட்டத்தின் முன்மொழிவு இலக்கம் 3.4 இன் கீழ் அம் முன் மொழிவானது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.*

*அதற்கிணங்க மேற்கூறப்பட்ட மயானத்தினை நிர்மாணிப்பது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபணைகள் காணப்படுமாயின் அறிவித்தல் வெளியிடப்படும் திகதி முதல் 30 நாட்கள் வரையான காலப்பகுதியினுள் எனக்கு சமர்ப்பிக்குமாறு இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

டீ. எம். சுமணசிரி,
தலைவர்,
நாரம்மல பிரதேச சபை.

*8 - 622/1*

---

## நாரம்மல பிரதேச சபை

### பஹமுனே அத்காலவத்தை/திவுல்கொல்ல பொது மயானத்தினை நிர்மாணிப்பதற்கான ஆட்சேபணை தெரிவித்தல்

*நாரம்மல பிரதேச சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட நாரம்மல பிரதேச செயலகப் பிரிவின் 1073 ஆம் இலக்கத்துடைய பஹமுனே கிராம அலுவலர் பிரிவினுள் திரு. பிரசன்ன ஒபேசேகர அவர்களுக்கு உரித்துடைய அத்காலவத்தை எனும் தனியார் காணியினுள் அமைந்துள்ள பழைய பொது மயானத்திற்குப் பதிலாக அக்காணியிலே மற்றொரு இடத்தில் உறுதிப்பத்திர இலக்கம் 9466 இனைக் கொண்ட கொடை உறுதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பேர்ச்சஸ் 80.02 மற்றும் நுழைவாயிலுக்காக பேர்ச்சஸ் 17.8 இனை அளவுடையதாகக் கொண்ட புதிய மயானத்தினை நிர்மாணிப்பதற்காக பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ளதால் 1946 ஆம் ஆண்டு இலக்கம் 57 இனைக் கொண்ட பொது மயானம் மற்றும் தனியார் மயானப் பூமிக் கட்டளைச் சட்டத்தில் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப 2018.07.03 ஆந் திகதியன்று நடைபெற்ற நாரம்மல பிரதேச சபையின் பொதுக் கூட்டத்தின் முன்மொழிவு இலக்கம் 3.4 இன் கீழ் அம் முன் மொழிவானது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.*

*அதற்கிணங்க மேற்கூறப்பட்ட மயானத்தினை நிர்மாணிப்பது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபணைகள் காணப்படுமாயின் அறிவித்தல் வெளியிடப்படும் திகதி முதல் 30 நாட்கள் வரையான காலப்பகுதியினுள் எனக்கு சமர்ப்பிக்குமாறு இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

டீ. எம். சுமணசிரி,
தலைவர்,
நாரம்மல பிரதேச சபை.

*8 - 622/2*

## நாத்தாண்டிய பிரதேச சபை

*1952 ஆம் ஆண்டு 06 ஆம் இலக்கத்திற்கான உள்ளூராட்சி சபைகளுக்கான (நிறைவேற்றப்பட்ட துணை விதி) சட்டம்*

*261 ஆம் அத்தியாயமாகிய 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்கத்திற்கான உள்ளூராட்சி சபைகளுக்கான (நிறைவேற்றப்பட்ட துணை விதிச்) சட்டத்தினால் 03 ஆம் பிரிவில் (i) ஆம் உப பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி நாத்தண்டிய பிரதேச சபையினால் 2018.06.21 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தின் போது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனையினை நிறைவேற்றப்பட்டது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

### தீர்மானம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநிலைச் சட்டத்தின்) 02 ஆம் பிரிவில் (i) ஆம் உப பிரிவில் (அ) பந்தியுடன் வாசிக்கப்பட வேண்டிய 261 ஆம் அத்தியாயமாகிய 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்கத்திற்கான உள்ளூராட்சி சபை (நிறைவேற்றப்பட்ட துணை விதி) சட்டத்தில் (02) ஆம் பிரிவில் (i) ஆம் உப பந்தியின் கீழ் வடமேல் மாகாணத்தில் மாகாண சபையில் உள்ளூராட்சி மன்ற விடயப் பொறுப்புடைய அமைச்சரிடத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி வடமேல் மாகாணத்தில் மாகாண சபையில் உள்ளூராட்சி மன்ற விடயப் பொறுப்பு அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்பட்டு 2015.08.31 ஆந் திகதி இலக்கம் 1930/6 க்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் அறிவிக்கப்பட்டதும் பிரதேச சபைகளில் குழுக்களை ஏற்படுத்தல், கூட்டங்களை நடாத்துதல், கால அறிக்கை மற்றும் தகவல்கள் சமர்ப்பித்தல், தகனக்கூடங்களை முறைப்படுத்தல், நிருவகித்தலும் கட்டணம் அறவிடுதலும், இறுதிக் கிரியை சேவைகளை வழங்கும் நிலையங்களின் நடவடிக்கைகளை நிருவகித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டணம் அறவிடல்களுக்கான பிரரேரணைகளுடனான நிறைவேற்றப்பட்ட துணை விதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் செயற்படுத்துவதற்கு மேற்குறிப்பிடப்பட்ட உள்ளூராட்சி சபை (நிறைவேற்றப்பட்ட துணை விதி) சட்டத்தின் 03 ஆம் பிரிவு (i) ஆம் உப பிரிவின் கீழ் ஏற்றுக் கொள்வதற்கு நாத்தண்டிய பிரதேச சபை பிரேரணை விடுக்கின்றது.*

*ரொசான் நிலந்த பர்னாந்து,*
*தலைவர்,*
*நாத்தண்டிய பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*நாத்தண்டிய,*
*2018.06.21.*

*08 - 646*

---

## அரநாயக்க பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 14 மற்றும் 24 (2) உறுப்புரையின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 ஆவது உறுப்புரையின் பிரகாரம் சபரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் அரநாயக்க பிரதேச சபையால் இங்கு இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதைகள்/வீதிகள் அரநாயக்க பிரதேச சபைக்குரிய பாதைகள்/வீதிகள் எனப் பிரகடனப்படுத்தி இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*தற்போது பிரதேச சபையால் அளந்து அடையாளமிடப்பட்டுள்ள இப்பாதைகள்/வீதிகள் பற்றி குறித்த காணி உரிமையாளராக உரிமை பாராட்டுவோரால் ஏதாவது எதிர்ப்புக்கள் தெரிவிப்பதாயின் இவ்வறிவித்தல் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தங்களது உரிமையை உறுதிப்படுத்துவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 (2) ஆவது உறுப்புரையின் பிரகாரம் செயற்படுமாறு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

இக்கால எல்லைக்குள் யாதேனுமொரு எதிர்ப்பு முன்வைக்கப்படாவிடின் அட்டவணையில் குறிப்பிடப்படும் பாதைகள்/வீதிகள் அரநாயக்க பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகள்/வீதிகளாக ஏற்றுக்கொண்டு நிர்வகிக்கப்படும் எனவும், பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக இத்துடன் பகிரங்க அறிவித்தல் விடுக்கின்றேன்.

கே. ஏ. நிஹால் செனவிரத்ன,
தலைவர்,
அரநாயக்க பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அரநாயக்க,
2018, யூலை 24.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | போதி மாவத்தையிலிருந்து கெவிலிபிட்டிய பிரதான பாதை. |
| பாதையின் ஆரம்பம் | : | திரு. டி. உபாலி உரிமை கோரும் மற்றும் திருமதி எஸ். ஜீ. ஆர். ஆர். குமாரிஹாமி உரிமை கோரும் வத்துரபாலுவ காணி ; |
| பாதையின் முடிவு | : | திரு. எம். அதுலகுமார உரிமை கோரும் வத்துரபாலுவ காணி ; |
| கிராம அதிகாரிப் பிரிவு | : | கெவிலிபிட்டிய ; |
| பாதையின் நீளம் | : | 125 மீற்றர் அகலம் : 08 அடி. |


பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்.

| பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1. திரு. பி. உபாலி (திருமதி ஆர். ஏ. டி. ரணசிங்ஹ மெனிகே) | வத்துரபாலுவ காணி |
| 2. திருமதி. எம். அனுலா விஜேவர்தன | வத்துரபாலுவ காணி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்.

| பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1. திருமதி எஸ். பீ. ஆர். ஆர். குமாரிஹாமி | வத்துரபாலுவ காணி |
| 2. திரு. எச். ஜீ. விமலசேன (திருமதி ஆர். டி. சந்திரிகா பத்மினி) | வத்துரபாலுவ காணி |
| 3. திரு. எல். அதுல குமார (திரு. எல். பியதாஸ) | வத்துரபாலுவ காணி |

அதிகாரம் பெற்ற நில அளவையாளர் எச். எம். ஆர். டீ. கே. ஹேரத் அவர்களின் 2009.12.24 ஆந் திகதி, 6385 ஆம் இலக்கத்தைக் கொண்ட பட வரைபுத்திட்டத்தின் பிரகாரமாகும்.


පිඹුරු අංකය: 6385
බෝධි මාවතෙන් ගැවිලිපිටිය මාර්ගය
2006.10.04
පරිමාණය 1:1000
සබරගමුව පළාතේ
කෑගල්ල දිස්ත්‍රික්කයේ
-පිඹුරු-
1
0.0347
00
0
13.72
125.00
08
2009.12.27
2009.12.24
3

**வலல்லாவிட பிரதேச சபை**

பொது நூலகத்திற்கான துணைச் சட்டம்

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்கம் கொண்ட உள்ளூராட்சி நிறுவன நியதி துணைச்சட்டத்தின் இரண்டாம் உறுப்புரையின் கீழ், மேல் மாகாணத்தின் மாகாண சபை உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் உருவாக்கப்பட்டு 2005.02.18 ஆந் திகதி 1381 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமான பத்திரத்தின் II (அ) பிரிவில் மாகாண சபை அறிவித்தலின் கீழ் வெளியிடப்பட்டதான உள்ளூராட்சி சபையின் பொது நூலகத்திற்கான துணைச்சட்டம், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆவது உறுப்புரையோடு வாசிக்க வேண்டிய 122 ஆவது உறுப்புரையில் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் அத்துணைச்சட்டத்தில் மேற்குறிப்பிட்ட இரண்டாவது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்களுக்கு கீழ் ஏற்றுக் கொள்வதற்கு 2018, மே மாதம் 22 ஆந் திகதி வலல்லாவிட்ட பிரதேச சபை அமர்வில் எடுக்கப்பட்ட சபைத் தீர்மானம், 2018, யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்துவதாக இதில் அறிவிக்கின்றேன்.*

*உதேனி அத்துகோரல,*
*தலைவர்,*
*வலல்லாவிட்ட பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*நாத்தண்டிய.*

*8 - 591*

---

**வரவு செலவுக் கூற்றுக்கள்**

*ரிதீகம பிரதேச சபை*

***2017.12.31 ஆந் திகதி இறுதி ஆண்டிற்கான நிதி செயல்முறை பற்றிய அறிவித்தல்***

| | குறிப்பு | 2016.12.31 | 2017.12.31 |
|---|---|---|---|
| **செயல்முறை வருவாய்** | | ரூ. ச. | ரூ. ச. |
| அரச பங்களிப்புடன் மீள்வருவன | 1 | 41,359,715.14 | 44,111,278.70 |
| வேறு வருவாய் | 2 | 34,519,901.84 | 36,447,710.27 |
| **மொத்த செயல்முறை வருவாய்** | | **75,879,616.98** | **80,558,988.97** |
| **செயல்முறை செலவு** | | | |
| மீள்வரும் செலவு | 3 | 62,288,271.76 | 62,831,510.05 |
| **மொத்த செயல்முறை செலவு** | | **62,288,271.76** | **62,831,510.05** |
| **ஆண்டிற்கான செயல்முறை உபரி/பற்றாக்குறை** | | 13,591,345.22 | 17,727,478.92 |
| மூலதன கிடைப்பனவு | 4 | 29,361,024.07 | 22,374,279.61 |
| மூலதன செலவு | 5 | 42,902,805.64 | 32,696,743.38 |
| **ஆண்டிற்கான செயல்முறை உபரி/பற்றாக்குறை** | | **49,563.65** | **7,405,015.15** |

**ரிதீகம பிரதேச சபை**

***2017.12.31 ஆந் திகதி நிதி நிலை பற்றிய அறிவித்தல்***

| | குறிப்பு | 2016.12.31 | 2017.12.31 |
|---|---|---|---|
| **சொத்து** | | | |
| **நிலையான சொத்து** | | | |
| சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் | 6 | 190,954,602.11 | 195,713,155.94 |
| **நிலையற்ற சொத்து** | | | |
| மொத்தம் | 7 | 894,348.98 | 1,042,967.00 |
| பணியாளர் கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவு | 8 | 4,131,931.76 | 4,575,419.85 |
| கிடைக்க வேண்டியவை | 9 | 70,281,804.02 | 64,910,698.54 |
| முதலீடு (முன் செலுத்தியவை) | 10 | 264,640.00 | 336,145.00 |
| நிதி மற்றும் நிதிக்குச் சமமானவை | 11 | 17,533,473.61 | 21,966,985.18 |
| **மொத்த சொத்து** | | **284,060,800.48** | **288,545,371.51** |
| **பொறுப்பு** | | | |
| நிலையான பொறுப்பு | 12 | 6,022,774.84 | 5,513,589.03 |
| நிலையற்ற பொறுப்பு | 13 | 52,654,137.88 | 43,843,357.84 |
| உரிமைகள் | 14 | 225,383,887.76 | 239,188,424.64 |
| **மொத்த உரிமைகளும் பொறுப்புக்களும்** | | **284,060,800.48** | **288,545,371.51** |

ஜே. ஏ. ஏ. குமாரசிங்க,
செயலாளர்,
ரிதீகம பிரதேச சபை.

8 - 626